இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 218 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 06 – வெள்ளிக்கிழமை 20 மார்ச் 2026 – சென்னை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 218 : Thiruvalluvar Year - 2057 - Panguni 06 - Friday 20 March 2026 - Chennai 10 Pages ₹ 5.00







கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.3.2026) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் கரூர், நாமக்கல், ஈரோடு, கோவை, திருப்பூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களிலிருந்து கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளவர்களுடன் நேர்காணல் நடத்தினார். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (19.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், புதுச்சேரி முன்னாள் சபாநாயகர், ப.கண்ணன் அவர்களின் மகன் விக்னேஷ் கண்ணன் மற்றும் திருபுவனைத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பி.அங்காளன் ஆகியோர் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, புதுச்சேரி மாநில தி.மு.க. ஒருங்கிணைப்பாளர், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் சட்டமன்ற உறுப்பினர் இரா. சிவா ஆகியோர் உடனிருந்தனர்.

## குஜராத் - மகாராஷ்டிராவை பின்னுக்குத் தள்ளி சாதனை!

# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, மார்ச் 20-

**‘திராவிட மாடல்’ ஆட்சியில் தமிழ்நாடு குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களை பின்னுக்குத் தள்ளி தமிழ்நாடு முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளது குறித்து பெருமிதம் பொங்க சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சாதனைகளைச் சொல்லி வெல்வோம் ஒன்றாக என்று பதிவிட்டுள்ளார்.**

இது தொடர்பாக ஆங்கிலப் பத்திரிகையில் வந்துள்ள செய்திக் குறிப்பையும் இணைத்துள்ளார்.

ஆங்கிலப் பத்திரிகையில் வெளியான செய்தி வருமாறு:-

குஜராத், மகாராஷ்டிராவை பின்னுக்குத் தள்ளி தமிழ்நாடு முன்னணி ஜவுளி ஏற்றுமதியாளராக உருவெடுத்துள்ளது, 4 ஆண்டுகளில் அதன் ஏற்றுமதி 29% ஆக உயர்ந்துள்ளது.

வருடாந்திர வர்த்தகப் பகுப்பாய்வுக்கான தேசிய இறக்குமதி ஏற்றுமதிப் பதிவேடு (NIRYAT) வெளியிட்ட சமீபத்திய தரவுகளின் படி, நாட்டின் மொத்த ஜவுளி ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க 21.84% பங்களித்து, ஜவுளி ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாக உருவெடுத்துள்ளது.

2024-25 நிதியாண்டிற்கான நிர்யாத் அறிக்கை, தமிழ்நாடு 7,997.17 மில்லியன் டாலர் மதிப்பிலான ஜவுளிகளை ஏற்றுமதி செய்துள்ளதாக வெளிப்படுத்துகிறது. இது, பாரம்பரியத் தொழில்துறையை விஞ்சி, மாநிலத்தை உறுதியாக முதல் இடத்தில் நிலைநிறுத்துகிறது.



தமிழ்நாட்டைத் தொடர்ந்து, குஜராத் 5,646.01 மில்லியன் டாலர் மதிப்புள்ள ஜவுளி ஏற்றுமதியுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தது, அதே நேரத்தில் மகாராஷ்டிரா 3,831.28 மில்லியன் டாலர் மதிப்புள்ள ஏற்றுமதியுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தது. உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்கம் போன்ற பிற மாநிலங்களும் தேசிய ஏற்றுமதியில் பங்கேற்றன.

இந்த அறிக்கை தமிழ்நாட்டின் குறிப்பிடத்தக்க வளர்ச்சிப் பாதையை எடுத்துக்காட்டியுள்ளது. 2020-21 ஆம் ஆண்டில், மாநிலத்தின் ஜவுளி ஏற்றுமதி $6,193.39 மில்லியனாக இருந்தது. அதனைத் தொடர்ந்த நான்கு ஆண்டுகளில், இந்த எண்ணிக்கை 29% அதிகரித்து, $1,803.78 மில்லியன் உயர்ந்துள்ளது.

2024-25 நிதியாண்டில் தமிழ்நாடு 7,997.17 மில்லியன் டாலர் மதிப்புள்ள ஜவுளிகளை ஏற்றுமதி செய்தது.

குஜராத்தின் ஜவுளி ஏற்றுமதியின் மதிப்பு 5,646.01 மில்லியன் டாலராக இருந்தது.

மகாராஷ்டிரா 3,831.28 மில்லியன் டாலர் மதிப்புள்ள ஜவுளி ஏற்றுமதியைப் பதிவு செய்தது.


TN pips Gujarat, Maha to become top textile exporter, graph up 29% in 4 yrs

மாநில அரசு வட்டாரங்கள் இந்த குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு, ஜவுளித் தொழில் மற்றும் அதன் தொழிலாளர்களுக்காகச் செயல்படுத்தப்பட்ட பிரத்யேக கொள்கைகள் மற்றும் சிறப்பு ஊக்கத்தொகைகளே காரணம் என்று கூறுகின்றன.

2024-25 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு மொத்தம் 36,610 மில்லியன் டாலர் மதிப்புடையதாக இருந்த தேசிய ஜவுளி ஏற்றுமதி சந்தையில், மாநிலத்தின் பங்கானது இத்துறையில் தமிழ்நாட்டின் ஆதிக்க நிலையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதை எடுத்துக்காட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**ஜவுளி ஏற்றுமதி: திராவிட மாடலின் 4 ஆண்டுகளில் 29% வளர்ச்சி!**

**★ குஜராத்தையும் மகாராஷ்டிராவையும் பின்னுக்குத் தள்ளித் தமிழ்நாடு முதலிடம்!**

**★ 2020-2021-இல் 6,193.39 மில்லியன் டாலராக இருந்த தமிழ்நாட்டின் ஏற்றுமதி அளவு, #DravidianModel அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளினால் அடுத்த நான்காண்டுகளில் 7,997.17 மில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.**

**★ இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில் தமிழ்நாடு மட்டுமே 21.84%!**

**★ இவை அனைத்தையும் சொல்வது நாமல்ல, ஒன்றிய அரசு!**

**சாதனைகளைச் சொல்லி வெல்வோம் ஒன்றாக!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## வேளாண் பொருட்களுக்கு ஊக்கத் தொகை:

# ஒன்றிய அரசின் உத்தரவுக்கு விவசாயிகள் சங்கம் கண்டனம்!

சென்னை, மார்ச் 20–

விவசாயிகள் விளைவிக்கும் வேளாண் பொருட்களுக்கு ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஆதார விலையை விட, மாநில அரசுகள் கூடுதலாக ஊக்கத்தொகை வழங்கக்கூடாது என, ஒன்றிய அரசு பிறப்பித்துள்ள உத்தரவுக்கு, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்ட அறிக்கை வருமாறு:–

கேரள மாநில எம்.பி. ஜான் பிரிட்டாஸ் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு, பதிலளித்த ஒன்றிய நிதித்துறை அமைச்சகம், விவசாயிகள் விளைவிக்கும் பொருட்களுக்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஆதார விலைக்கு மேல் மாநில அரசுகள் எவ்வித கூடுதல் தொகையையும் வழங்கக் கூடாது என்று, அனைத்து மாநில தலைமை செயலர்களுக்கும் ஏற்கனவே கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

மேலும், கேரளா போன்ற மாநிலங்கள் தற்போது வழங்கி வரும் ஊக்கத் தொகையை நிறுத்துவது குறித்து பரிசீலிக்க வேண்டும். நாடு முழுவதும் 22 விளைபொருட்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் எவ்வித தொகையையும் அரசு ஆதரிக்கவில்லை என்றும் ஒன்றிய அரசு திட்டவட்டமாக கூறியுள்ளது.

வேளாண் விளைபொருட்களுக்கான உற்பத்தி செலவு என்பது நாடு முழுவதும் ஒரே சீராக இருப்பதில்லை.

மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடும் நிலையில், முதலீட்டுக்கான வட்டி, குடும்ப உழைப்பு உள்ளிட்ட அனைத்து செலவுகளையும் கணக்கில் கொள்ளாமல், ஒரு பகுதியை மட்டும் கணக்கிட்டு அறிவிக்கப்படும் விலையால் விவசாயிகள் பெரும் இழப்பைச் சந்தித்து வருகின்றனர்.

இந்த இழப்பை ஈடுகட்டவே, அந்தந்த மாநில அரசுகள் தங்களின் நிதி நிலைமைக்கு ஏற்ப ஊக்கத் தொகைகளை வழங்குகின்றன. எனவே, விவசாயிகளைப் பாதிக்கும் இந்த உத்தரவை மத்திய அரசு உடனடியாக கைவிட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாட்டில் 8,65 லட்சம் முதியோர், மாற்றுத் திறனாளிகள்

# வீட்டிலிருந்தே வாக்களிக்க படிவம் விநியோகம்!

சென்னை, மார்ச் 20–

தமிழகத்தில் உள்ள முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் 8.65 லட்சம் பேர் வீட்டிலிருந்தே வாக்களிப்பதற்கான படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிக்க, வாக்குச்சாவடிக்கு வர முடியாத 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் 40 சதவீதத்துக்கு மேல் உடல் பாதிப்புடைய மாற்றுத் திறனாளிகளுக்கு வீட்டிலிருந்தே தபால் வாக்கு மூலம் வாக்களிக்க தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கு, தேர்தல் அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 5 நாட்களுக்குள் தொடர்புடைய தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலருக்கு 12டி படிவம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

தமிழகத்தில் தற்போது, 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் 4 லட்சம் பேர், 100 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் 2,530 பேர், மாற்றுத் திறனாளிகள் 4.63 லட்சம் பேர் என மொத்தம் 8.65 லட்சம் பேர் உள்ளனர்.

இவர்கள் தபால் வாக்கு செலுத்த ஏதுவாக, வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் தகுதியுள்ள வாக்காளர்களின் வீடுகளுக்குச் சென்று படிவங்களை வழங்கி, பூர்த்தி செய்த படிவங்களை பெற்று வருகின்றனர்.

வீட்டில் இல்லாதவர்களின் வீடுகளுக்கு மீண்டும் ஒருமுறை செல்ல உள்ளனர்.

2 முறையும் வாக்காளர் வீட்டில் இல்லையெனில், அவர் தபால் வாக்களிக்க விருப்பமற்றவராகக் கருதப்படுவார் என்று தேர்தல் நடத்தும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பின்னர், இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்ட பிறகு, ஒவ்வொருவரின் வீடுகளுக்கு சென்று, வாக்குச்சாவடி அமைப்பை ஏற்படுத்தி, வாக்களிக்க வைப்பதற்கான ஏற்பாடுகளை அந்தந்த தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.



**சாதனைப் பயணம் தொடரும்; ஓரணியில், ஒற்றுமையாக !**

